IN THE COURT OF THE PRINCIPAL DISTRICT MUNSIF,
THIRUMANGALAM.
O.S.No.137/2010
DEPOSITION OF WITNESS

பி.வா.சா.1 சாட்சி செல்வகுமார் த.பெ.முருகேசன்

**Solemnly affirmed and sworn by Thiru.E.Manikandan, B.A.,B.L, Principal District Munsif (FAC) on 28.04.2026 in accordance with the provisions of Act XX141.**

வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :

1. வழக்கு விபரம் தெரியும் என்றால் சரிதான். நான் 12ம் வகுப்பு வரை படித்துள்ளேன். எதிர்வழக்குரை தாக்கல் செய்ய நான்தான் விபரம் சொன்னேன் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி எனக்கு என்ன உறவு என்றால் தாயார் ஆவார், 2ம் பிரதிவாதி எனது சகோதரராவார். மேற்படி 1, 2 பிரதிவாதிகள் சார்பாகவும் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரிதான். தாவா சொத்துகள் 3 அயிட்ட சொத்துக்கள் என்றால் சரிதான். மேற்படி தாவா சொத்துக்கள் 3ம் சர்வே எண். 169/1 ல் கட்டுப்பட்ட சொத்துக்கள் என்றால் சரிதான்.

2. 3 இலக்க சொத்துக்களும் கிழக்கே இருந்து மேற்காக கிழமேலாக உள்ளது என்றால் சரிதான். பிராது மாதிரி வரைபடத்தில் உள்ள A,B,C,D பகுதிதான் வழக்கு சொத்துக்கள் என்றால் சரிதான். என்னுடைய எதிர்வழக்குரையில் குறிப்பிட்டுள்ள எனது பாட்டி சிவணம்மாளுக்கு பாத்தியப்பட்ட சொத்தானது மேற்படி வழக்கு சொத்தான பிராது மாதிரி வரைபடத்தில் குறிப்பிட்டுள்ள A,B,C,D பகுதிக்கு தென்புறம் உள்ளது என்றால் சரிதான்.

3. தென்புறம் பாத்தியப்பட்ட சொத்து 8 1/2 செண்டு என்று காட்டுவதற்கு ஆவணம் எதுவும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் தாக்கல் செய்துள்ளேன்.

நான் எந்த ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாவா A,B,C,D என குறிப்பிட்டுள்ள வழக்கிடை சொத்துக்கள் ஆதியில் சின்ன கருப்பதேவருக்கு பாத்தியப்பட்டது என்றால் சரிதான். மேற்படி சொத்தைதான் 16.04.1968 ல் மருதநாயக்கம் கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். மருதநாயக்கர் கிரையம் பெற்ற சொத்தை 04.02.1998 ல் பாண்டி என்பவருக்கு கிரையம் செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான்.

4. பாண்டியன் 1994ம் ஆண்டு காலமாகிவிட்டார் என்றால் சரிதான். பாண்டியனின் வாரிசுகள்தான் வேலம்மாள் வகையறா என்றால் சரிதான். மேற்படி வேலம்மாள் வகையறாவிடம் இருந்துதான் வாதி 16.04.1997 ல் மேற்படி சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். 1968 முதல் ஏற்பட்ட பத்திரங்களில் மேற்படி சின்னகருப்பதேவர், பாண்டியன் வேலம்மாள் வகையறா அனுபவம் செய்துவந்து வாதி கிரையம் பெற்று அனுபவித்து வரும் சொத்தில் எனக்கோ எனது பாட்டிக்கோ உரிமையில்லை என்றால் சரிதான்.

5. வாதி கிரையம் பெற்ற சொத்தில் ஒரு கடையும், வீடும் கட்டி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். மேற்படி வாதியின் கடைக்கு தென்வடல் ரோடில் மேற்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். கடையின் கிழக்கு பக்கத்தில் வாதிக்கு பாத்தியப்பட்ட காலி இடமும், வீடும் உள்ளது என்றால் சரிதான். வாதியின் வீடு வடக்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். வாதியின் கடையை ஒட்டி வடபுறத்தில் உள்ள பாதை வழியாகத்தான் வாதி புலங்கி வருகிறார் என்றால் சரிதான். என்னுடைய பாட்டிக்கு பாத்தியப்பட்ட 8 1/2 செண்டு எத்தனை பகுதிகளாக உள்ளது என்றால் 2 பத்திரங்களாக உள்ளது. மேற்படி 2 பத்திரங்கள் எனது கைவசம் உள்ளது என்றால் சரிதான். பத்திரம் என்பது எனது பாட்டி மணி என்பவரிடம் கிரையம் வாங்கிய சொத்து

என்றால் சரிதான். மணி என்பவரிடம் எத்தனை செண்டு வாங்கினார் என்றால் 3 1/2 செண்டு வாங்கினார். மற்றொரு பத்திரம் யாரிடம் இருந்து வாங்கினார் என்றால் சின்னகருப்பதேவரிடமிருந்து வாங்கப்பட்டது, எனது பாட்டி பெயரில் கிரையம் வாங்கப்பட்டது, 5 செண்டு வாங்கப்பட்டது.

6. மேற்படி 2 பேரிடமிருந்து எனது பாட்டி சிவணம்மாள் கிரையம் பெற்ற விபரத்தை எனது எதிர்வழக்குரையில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். நான் எனது எதிர்வழக்குரையில் எனது பாட்டி மேற்படி 2 கிரைய பத்திரங்கள் மூலமாக மணி என்பவரிடமிருந்தும் சின்னகருப்பதேவரிடமும் கிரையம் பெற்றதாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி 2 கிரைய பத்திரத்தின் அசல் எண் கைவசம் வீட்டில் உள்ளது என்றால் சரிதான். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் சரிதான். எனது அப்பா பெயர் முருகேசன் என்றால் சரிதான். எனது அப்பாவுக்கு எனது பாட்டி 15.05.1995 ல் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தின் ஒரு பகுதியான 4 1/4 செண்டை தான செட்டில்மெண்டு மூலம் பாத்தியப்படுத்தினார் என்றாலும் மேற்படி தான செட்டில்மெண்டு என்வசம் உள்ளது என்றாலும் சரிதான்.

7. எனது தகப்பனாருக்கு பாட்டி தானமாக எழுதிகொடுத்த சொத்திற்கு மேற்கே ஓடை உள்ளது என்றால் சரிதான். மேற்படி ஓடை பகுதியில் நாங்கள் ஆக்கிரமிப்பு செய்தோம் என்று அப்பகுதி மக்களின் புகாரின் பேரில் அளவீடு செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்தமாரி 2 முறை அளவீடு செய்யப்பட்டது. மேற்படி அளவீடு என்பது தாவா வழக்கிற்கு முன்னரா என்றால் இல்லை. தாவா வழக்கிற்கு பின்னிட்டு ஆகும். மேற்படி அளவீடு செய்ததற்கு ஆதாரம் எதுவும் கொடுத்தார்களா என்றால் கொடுத்தார்கள்,

என்னிடம் உள்ளது. எங்களுடைய வீட்டிற்கு தெற்கு பார்த்த வாசல் என்றால் சரிதான். என்னுடைய வீட்டிற்கு தெற்கே கிழமேல் வீதி உள்ளது என்றால் சரிதான்.

8. மேற்படி கிழமேல் வீதி மேற்கே உள்ள ஓடை சென்று அங்கிருந்து வடபுறம் திரும்பி ஓடை ஒட்டியுள்ள தெருவிற்கு வடக்கு நோக்கி செல்கிறது என்றால் சரிதான். எங்களது வீட்டிற்கு திருப்பரங்குன்றம் பேரூராட்சியில் இருந்து கட்டிட வரைபட அனுமதி பெற்றுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி கட்டிட வரைபட அனுமதி அசல் என்னிடம் உள்ளது என்றால் சரிதான். அதை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யலாம் என்றால் சரிதான். மேற்படி கட்டிட வரைபட அனுமதியை பார்த்தால் நாங்கள் எவ்வளவு அளவிற்கு கட்டிடம் கட்டியுள்ளோம், எவ்வளவு காலி இடம் விட்டுள்ளோம் என்று தெரியவரும் என்றால் சரிதான். நீதிமன்ற ஆணையாளரிடம் நான் மேற்சொன்ன கட்டிட வரைபட அனுமதி மற்றும் பத்திரங்களை கொடுத்தேனா என்றால் கொடுக்கவில்லை. அவர் கேட்கவில்லை நான் கொடுக்கவில்லை.

9. நீதிமன்ற ஆணையர் வருவாய்துறை ஆவணங்களான புல வரைபடத்தை மையமாக வைத்துதான் அளந்தார்கள் என்றால் சரிதான். பத்திரங்களின் அளவுகை புல வரைபடத்தோடு அளவுகளை ஒப்பிட்டு நீதிமன்ற ஆணையர் பார்த்தார்களா என்றால் பார்க்கவில்லை. நீதிமன்ற ஆணையர் எந்த அளவு கல்லை மையமாக வைத்து அளவீடு செய்தார் என்றால் எனக்கு தெரியாது. நீதிமன்ற ஆணையரின் அறிக்கை மற்றும் வரைபடம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். மேற்படி நீதிமன்ற ஆணையரின் அறிக்கைக்கு ஆட்சேபணை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நீதிமன்ற ஆணையரின் அறிக்கையில் தாவா சொத்தின் ஒரு சிறு பகுதியை

பிரதிவாதிகள் தரப்பில் ஆக்கிரமிப்பு செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதி வீட்டின் தெற்கு பக்க சுவர் மற்றும் எனது வீட்டின் வடக்கு பக்க சுவரை நில அளவையர் நிர்ணயம் செய்தாரா என்றால் செய்தார். வாதி வீட்டின் தெற்கு பக்க சுவர் மற்றும் எனது வீட்டின் வடக்கு பக்க சுவரின் இடைப்பட்ட பகுதியில் காலி இடம் மேல்புறத்தில் இல்லை, கீழ்புறத்தில் காலி இடம் உள்ளது, எனது வீட்டின் வடமேற்கு பகுதியில் பாத்ரூம் கட்டியுள்ளேன். மேற்படி பாத்ரூமின் எனது கட்டிடத்தின் வடக்கு சுவரும் வாதியின் வீட்டின் தெற்கு சுவரும்தான் ஒட்டி அமைந்துள்ளது என்றால் சரிதான்.

10. கிழக்கேயுள்ள சந்தில் இருந்து மேற்கு நோக்கி வந்தால் மேற்கேயுள்ள பாத்ரூம் முட்டி வடபுறத்தில் உள்ள குறுகிய பகுதி வழியாகத்தான் மேற்கே வரமுடியும் என்றால் சரிதான். மேற்படி சந்தின் மேற்புறம் உள்ள பாத்ரூமை நாங்கள் எங்கள் இடத்தில் கட்டியுள்ளோம் என்றால் சரிதான். மேற்படி பாத்ரூம் கட்டியதால்தான் எனக்கும் வாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனாருக்கு எனது பாட்டி எழுதிகொடுத்த 4 1/4 செண்டில் கிழக்கு பக்கம் வீடும், மேற்கு மற்றும் தென்புறத்தில் காலி இடமும் உள்ளது என்றால் சரிதான். மேற்படி காலி இடத்தை சுற்றிலும் வேலி அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல. செட்டு அமைத்து, விறகு கடை வைத்திருந்தேன். மேற்படி விறகு கடை அமைந்துள்ள செட்டை மேல்புறத்திலும், வடபுறத்திலும் கூடுதலாக வாதியின் ஒரு பகுதியையும், மேல்புறத்தில் உள்ள ஓடையின் ஒரு பகுதியையும் ஆக்கிரமிப்பு செய்து செட்டு அமைத்துள்ளேன் என்றால் சரியல்ல.

11. மேற்படி ஆக்கிரமிப்பு போக்குவரத்திற்கு இடைஞ்சலாக உள்ளதாக அப்பகுதி மக்கள் புகார் கொடுத்து ஆக்கிரமிப்பு தொடர்பாக அளவீடு

செய்யப்பட்டுள்ளது என்றால் வாதியின் தூண்டுதலின் பேரில் புகார் கொடுக்கப்பட்டது. மேற்படி புகாரானது பொது மக்களால் போக்குவரத்திற்கு இடையூறு ஏற்பட்டதால் பொது மக்களின் கோரிக்கையை நான் நிராகரித்ததால், பொது மக்கள் வருவாய்துறை அதிகாரியை அனுகி மேற்படி அளவீடு செய்யப்பட்டது என்றால் சரியல்ல.

(வாதி தரப்பு வேண்டுகோளுக்கு இணங்கு குறுக்கு விசாரணை தொடர்ச்சி ஒத்தி வைக்கப்படுகிறது. )

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொன்னதை

தட்டச்சு செய்து அவருக்கு படித்துக்காட்டி

அவர் சரியென்று ஒப்புக்கொண்டு இதில்

கையொப்பமிட்டார்.

ESWARAN MANIKANDAN

Digitally signed by ESWARAN MANIKANDAN
Date: 2026.04.28 10:11:48 +0530

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி (FAC),

திருமங்கலம்.